**தலைப்பு 103 - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையில் 1 மற்றும் 2 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான பொதுவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்புக்குமுரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 222 | இலங்கை தரைப்படை |
| 223 | இலங்கை கடற்படை |
| 224 | இலங்கை வான்படை |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |
| 325 | இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினதும் மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானம் கணக்குகள், களஞ்சிய முற்பணக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அமைச்சினதும் திணைக்களங்களினதும் மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களிறிகும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான

மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **அமைச்சு/திணைக்களம்** | **முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 103 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 2015 யூலை 27 |
| 222 | இலங்கை தரைப்படை | 2015 யூலை 15 |
| 223 | இலங்கை கடற்படை | 2015 யூலை 27 |
| 224 | இலங்கை வான்படை | 2015 யூலை 14 |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 2015 யூன் 16 |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 2015 யூன் 17 |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் | 2015 யூன் 26 |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 2015 யூலை 21 |
| 325 | இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 2015 யூலை 27 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள், களஞ்சிய முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 08 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 285,670.43 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 274,723.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 0.9 மில்லியன் முதல் ரூபா 6,111.33 மில்லியன் வரையான வீச்சு அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.01 சதவீதம் முதல் 40.25 சதவீதம் வரையான வீச்சு அளவைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 103 | 25,626.50 | 19,515.17 | 6,111.33 | 23.85 |
| 222 | 144,875.98 | 142,786.25 | 2,089.73 | 1.44 |
| 223 | 54,319.24 | 54,170.13 | 149.11 | 0.27 |
| 224 | 43,815.26 | 42,610.51 | 1,204.75 | 2.75 |
| 226 | 2,432.55 | 1,453.45 | 979.10 | 40.25 |
| 227 | 555.47 | 549.96 | 5.51 | 0.99 |
| 291 | 1,829.77 | 1,427.92 | 401.85 | 21.96 |
| 320 | 12,151.00 | 12,150.10 | 0.90 | 0.01 |
| 325 | 64.66 | 59.53 | 5.13 | 7.93 |
| மொத்தம் | **285,670.43** | **274,723.02** | **10,947.41** | **3.83** |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 09 அமைச்சுக்கள் மற்றும் 09 திணைக்களங்களினால் ரூபா 2,260.97 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடுகள்

வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 2,047.85 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 215.29 மில்லியன் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. ஓய்வூதியத் திணைக்களத்தினால் இலங்கை விமானப் படைக்கு ரூபா 349.07 மில்லியன் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதி ஏற்பாட்டை ரூபா 2.17 மில்லியனால் விஞ்சி ரூபா 351.24 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டில் 04 வருமான குறியீடுகளிற்காக ரூபா 7,447.50 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 8,514.88 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 103.04 சதவீதம் முதல் 146.29 சதவீதம் வரையான வீச்சளவில் வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | வருமான மதிப்பீட்டை விஞ்சி சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | வருமான மதிப்பீட்டை விஞ்சி சேகரிக்கப்பட்ட வருமானம் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03.07.05 | 12.50 | 12.88 | 0.38 | 3.04 |
| 20.03.02.16 | 170.00 | 248.69 | 78.69 | 46.29 |
| 20.03.02.07 | 7,173.25 | 8,150.85 | 977.60 | 13.63 |
| 20.03.02.03 | 92.00 | 102.46 | 10.46 | 11.37 |
| **மொத்தம்** | **7,447.75** | **8,514.88** | **1,067.13** | **14.33** |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 07 திணைக்களகங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| ------- | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியா னவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10301 | 44.00 | 37.58 | 30.00 | 40.33 | 250.00 | 159.40 |
| 22201 | 2,200.00 | 1,410.30 | 1,500.00 | 1,690.16 | 4,250.00 | 2,108.23 |
| 22301 | 455.00 | 358.49 | 320.00 | 404.24 | 900.00 | 435.44 |
| 22401 | 500.00 | 237.14 | 390.00 | 352.30 | 1,575.00 | 471.41 |
| 22601 | 30.00 | 22.49 | 22.70 | 27.00 | 154.00 | 124.68 |
| 22701 | 18.00 | 17.61 | 11.00 | 13.02 | 65.00 | 42.65 |
| 29101 | 11.25 | 6.49 | 7.00 | 7.44 | 51.03 | 33.79 |
| 32001 | 175.00 | 153.90 | 155.00 | 153.11 | 275.00 | 8.39 |

### 2.3.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தின் களஞ்சிய முற்பணக் கணக்கு தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்திற்குரிய களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| ------- | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறை ந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 22302 | 495.00 | 408.72 | 500.00 | 562.31 | 450.00 | 34.07 |

#### (ஆ) நிதி விளைவுகள்

களஞ்சிய முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறாகும்.

| விடய இலக்கம் | முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி விளைவுகள் 2014 | | நிதி விளைவுகள் 2013 | |
|---|---|---|---|---|---|
| -------- | ------------------------------- | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 22302 | வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் இரவைகளை விற்பனை செய்தல் | 120.10 | 100.31 | 97.32 | 115.31 |

## 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 06 திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் ரூபா 13,894.18 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 7002/0000/00/0027/0014/000 | 13,058.09 |
| இலங்கை தரைப்படை | 7002/0000/00/0028/0014/000 | 129.63 |
| இலங்கை கடற்படை | 7002/0000/00/0029/0014/000 | 700.11 |
| இலங்கை வான்படை | 7002/0000/00/0030/0014/000 | 5.89 |
| குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | 7002/0000/00/0032/0014/000 | 0.21 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 7002/0000/00/0091/0014/000 | 0.23 |
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0409/0014/000 | 0.02 |
| மொத்தம் | | **13,894.18** |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 06 திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 1,411.03 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0017/000 | 744.04 |
| இலங்கை தரைப்படை | 6000/0000/00/0015/0103/000 | 87.00 |
| இலங்கை கடற்படை | 6000/0000/00/0015/0104/000 | 491.49 |
| இலங்கை விமானப் படை | 6000/0000/00/0015/0105/000 | 29.68 |
| குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0107/000 | 2.54 |

| | | |
|---|---|---|
| ஆட்பதிவுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0108/000 | 7.27 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 6000/0000/00/0015/0146/000 | 34.51 |
| -மேற்படி- | 6000/0000/00/0001/0024/000 | 14.5 |
| | | ----------- |
| மொத்தம் | | **1,411.03** |
| | | ====== |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள், களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தி முதல் 10 ஆம் பந்தி வரையுள்ள பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 103 – பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

11 செலவின விடயங்களிற்காக மிகை நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளில் 56 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்செல்லை அளவில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் குறித்த நோக்க உப கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்ட கருமம் நிறைவேற்றப்பட்டவுடன் அந்தக் கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 265,000 உப கட்டுநிதிகள் குறித்த கருமங்கள் முடிவுற்று 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சுத் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளைக் கடந்த ரூபா 3,606,132 தொகையான 04 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் குறித்துரைத்த செயற்பாடுகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 75,032 தொகை குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஆட்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 08 அலுவலகங்களால் குறித்துரைத்த செயற்பாடுகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 11,527,303 வெகுமதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 170 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 வருமானக் கணக்குகள்

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அவருக்கு வருமானக் குறியீடொன்றிற்கான வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் என்ற கருமங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

10.03.07.05 ஆம் இலக்க வருமானக் குறியீடு – துப்பாக்கிகள், வெடி பொருட்கள் அனுமதிப்பத்திர கட்டணம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,710,800 வருமானம் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட கால வீச்சுக்கு உரித்தானவையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ஆ) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் பொருளாதார நிலையின் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு பல்வேறுபட்ட சேவைகளிற்காகவும் அறவிடப்படுகின்ற கட்டணங்களை காலத்திற்கேற்ற விதத்தில் திருத்தவேண்டிய போதிலும், துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வெடி பொருட்கள் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்பன முறையே 1996 மற்றும் 2000 ஆண்டுகளிற்கு பின்னர் திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

---

10301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 6,058,093 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த மீதிகள் 01 ஆண்டு முதல் 27 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து வந்திருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 நவம்பர் 04 ஆந் திகதி ரூபா 2,070,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட நிழற்படப் பிரதியெடுத்தல் இயந்திரம் உள்ளிட்ட ஏனைய இயந்திரங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது ஏறத்தாழ 06 ஆண்டுகளாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ரூபா 48,034,774 ஆன பொறுப்புக்கள் ஓராண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து காணப்பட்டு வந்தது. 2014 ஆம் ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,831,112 ஆன செலவினம் 2014 ஆம் ஆண்டில் பொறுப்புக்களாக ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3.8 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரை | 19,817,306,000 | இலங்கை தரைப்படையின் தலைமையகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணியினை ஹோட்டேல் வணிக அபிவிருத்திக்காக வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு விற்பனை செய்தமையால் கிடைத்திருந்த பணம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 925,925,814 | பாராளுமன்ற அங்கீகாரமின்றி அரசாங்கத்திற்குச் சொந்தமாக வேண்டிய அக் காணியினை விற்பனை செய்தமையால் கிடைத்த பணம் அரசாங்க வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதிலிருந்து ரூபா 925.93 மில்லியன் வட்டி கிடைத்திருந்ததுடன் அப் பணம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | அகுரேகொட பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் பாராளுமன்றத்தினால் ரூபா 3,000 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| | | போதிலும், அந்த நிதியேற்பாட்டினை ரூபா 2,211.16 மில்லியனால் விஞ்சி ரூபா 5,211.16 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | 10,875,314 | அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினதும் முப்படைகளினதும் தலைமை அலுவலகத்தினை நிர்மாணிக்கையில் 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி கட்டிடத்தில் ஏற்பட்டிருந்த திடீர் தீ விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | 557,727 | அரச ஊழியர்களின் உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் திறன் அபிவிருத்திக்காக செய்யப்பட்டிருந்த செலவினம், வெளிநாட்டு பயணச் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3.9 வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டில் அமைச்சினால் வெளிநாட்டு நிதியளித்தல் கடன்களின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 42,031,740,000 ஆகக் காணப்பட்டதுடன், அந்த செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 4,287,660,000 பயன்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டக் காலத்தினுள் செயற்திட்ட நடவடிக்கைகளை பூரணப்படுத்தக்கூடிய வகையில் செயற்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டக் காலத்தில் ஏறத்தாழ 50 சதவீதம் முடிவடைந்திருந்த போதிலும், அத்திகதியில் காணப்பட்ட நிதிகளிலிருந்து 17.31

சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் எஞ்சிய 50 சதவீதத்தினை செயற்திட்டக் காலத்தினுள் செலவிடுவதற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே அனைத்து உப கூறுகளையும் ஆரம்பிப்பதற்கான ஆற்றல் காணப்பட்ட போதிலும், செயற்திட்டக் காலத்தில் 50 சதவீதம் முடிவடைந்திருந்த பின்னரும் 10 உப கூறுகளில் 04 இற்காக எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டிருந்த சிக்கனமற்ற விதத்தில் இடம்பெற்றிருந்த கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 577,170 பெறுமதியான 55 டோனர்கள் 2015 மார்ச் 17 ஆந் திகதி இடம்பெற்ற ஏலத்தில் ரூபா 1,200 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. டோனர் வகைகளில் குறிப்பிடத்தக்களவு மீதி களஞ்சியத்தில் காணப்படுகையில் மீண்டும் மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டு இருப்பிற்கு வழங்கப்பட்டிருந்தமையால் அந்த டோனர்களின் காலம் கடந்திருந்தது. தேவையினை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட்டிருக்காமை காரணமாக ரூபா 575,970 அரசாங்க பணம் பயனற்றுப் போயிருந்தது.

(அ) ‘‘அபி வெனுவென் அபி’’ என்ற பெயரில் வேறொரு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில் அந்த நிதியத்தினால் செலவிடப்பட வேண்டிய ரூபா 6,292,456 அமைச்சின் நிதியேற்பாடுகளிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களிற்கு வெகுமதிகளை வழங்குவதற்கு ரூபா 7,549,070 தொகையும் அவர்களிற்கு விருந்துபசாரத்திற்காக ரூபா 5,676,920 தொகையுமாக ரூபா 13,225,990 கூட்டுத்தொகை ஏனைய வழங்கல்கள் மற்றும் ஏனைய சேவைகள் ஆகிய செலவின விடயங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. இந்த செலவினங்கள் அனைத்தும் நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்காத உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் மனித வளத் தகவல்களை கணனி மயப்படுத்துவதற்காக ரூபா 893,985 செலவிடப்பட்டு சேமிப்பக (Server) முறைமையொன்று 2014 மே 14 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அப் பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமொன்றினால் தயரிக்கப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இரு தரப்பினாலும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. சேமிப்பக முறைமை கொள்வனவு செய்யப்பட்டு ஏறத்தாழ 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், தகவல்களை கணனி மயப்படுத்துகையில் எழுந்திருந்த சிக்கல்கள் காரணமாக அது இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2005 மே 25 ஆந் திகதி சனாதிபதி செயலகத்திற்கும் 2010 யூன் 15 ஆந் திகதி கடலோர பாதுகாப்பு திணைக்களத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்த 02 மோட்டார் வாகனங்களை காப்புறுதி செய்வதற்கு மீளாய்வாண்டில் அமைச்சினால் ரூபா 152,777 செலவிடப்பட்டிருந்தது.

(இ) பூரண காப்புறுதி பாதுகாப்புடன் கூடிய அமைச்சுக்குச் சொந்தமான கெப் வாகனம் 2013 திசெம்பர் 27 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. அந்த வாகனம் எவ்வித திருத்தங்களும் செய்யப்படாது 02 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக முகவர் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் நட்டத்தினை ஈடுசெய்வதற்காக காப்புறுதி உரிமைத்துவத்தினையேனும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நட்டம் தொடர்பில் அமைச்சினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் நிதி அதிகாரக் கையளிப்புக்களிற்கு அமைய அரசாங்க உளவுச் சேவையின் பணிப்பாளருக்கு கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த ரூபா 75,000 எல்லை மீறலை தவிர்ப்பதற்காக ரூபா 249,250 பெறுமதியான ஒரே வகையைச் சார்ந்த பொருட்கள் கிட்டிய திகதிகளில் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 75,000 எல்லை மீறப்படாத வகையில் சில பட்டியல்களிற்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

(உ) தேவைக்காக பயன்படுத்தாது நீண்ட காலமாக அசைவுறாதிருந்த ரூபா 118,846 கிரயம் கொண்ட பொருட்கள் களஞ்சியத்தில் விளைவின்றி காணப்பட்டன.

(ஊ) முப் படைகளும் சிவில் பாதுகாப்பு திணைக்களமும் வெளித்தரப்பினர்களிற்கு வழங்கியிருந்த சேவைகளிற்காக உழைக்கப்பட்டிருந்த வருமானங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரை மற்றும் 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிராமையினை திருத்துவதற்காக அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதி ஆண்டின் போதான உரித்துக் கோரல்கள் அந்த ஆண்டிலேயே செலுத்தித் தீர்க்கப்பட்டிருக்காமை காரணமாக நிலுவை மின்சார பட்டியல்களை செலுத்துகையில் ரூபா 1,364,006 தண்டப் பணம் மீளாய்வாண்டில் அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 61 | 51 | 10 |
| மூன்றாம் நிலை | 11 | 05 | 06 |
| இரண்டாம் நிலை | 270 | 170 | 100 |
| ஆரம்ப நிலை | 151 | 134 | 17 |
| மொத்தம் | 493 | 360 | 133 |

மீளாய்வாண்டின இறுதியளவில் 133 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 222 – இலங்கை தரைப்படை

### 4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தரைப் படையினால் கோரப்பட்டிருந்த கட்டுநிதி எதிர்பார்த்தவாறு திறைசேரியினால் வழங்கப்பட்டிராமை காரணமாக 05 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,786,921,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 935,882,009 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 851,038,991 அல்லது ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 48 சதவீதமானவை சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,225,000,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 422,372,763 கடன் மீதிகள் 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலவி வந்திருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ஆ) மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,685,203 கடன் மீதியினை அறவிடுவதற்காக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதிகளில் ரூபா 1,026,584 கூட்டுத்தொகை 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவருகின்ற மீதியாகும். அவ்வாறே, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 49,078,991 கடன் மீதிகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை தரைப் படையின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) கையேற்கப்படாத காணிகளில் கட்டிடங்களை நிர்மாணித்தல்

இலங்கை தரைப் படையினால் ராகமையில் அமைந்துள்ள இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு உரித்தான 10 ஏக்கர் காணியில் இலங்கை தரைப்படையின் ஆயுதக் களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 362,706,785 செலவிடப்பட்டிருந்தது. இக் காணியினை கையேற்பது தொடர்பில் சர்ச்சைக்குரிய நிலை காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

இலங்கை தரைப் படையின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட தீர்க்கப்படாத ரூபா 11,584,040,131 பொறுப்புக்கள் ஒட்டு மொத்த நிதி ஏற்பாட்டில் 8 சதவீதமாக காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக இலங்கை தரைப் படையினால் 06 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பினை விஞ்சி ரூபா 91,586,470 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

### 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை தரைப் படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இலங்கை தரைப் படையால் A4 வகை 5,750 புகைப்படப் பிரதியெடுத்தல் கடதாசி பக்கட்டுக்களையும் பிரின்டொனிக்ஸ் வகை 250 கணனி ரிபன்களையும் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 3,465,000 மற்றும் ரூபா 1,001,000 செலவிடப்பட்டிருந்தது. அதற்குரிய கொடுப்பனவு உறுதிச் சிட்டைகளில் பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிற்குப் பதிலாக தனிப்பட்ட நபர்களின் பெயர்களில் காசோலைகள் மாற்றப்பட்டிருந்தன. மேலும், அந்த பெறுனர்களின் பெயர்களில் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அப் பெயர்களில் பெறுமதிசேர் வரி செலுத்தும் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் 30,000 வெள்ளை கட்டில் விரிப்புக்களை கொள்வனவு செய்வதற்காக 2012 நவம்பர் 21 ஆந் திகதி கூறுவிலைகள் கோரப்பட்டு தெரிவு

செய்யப்பட்டிருந்த வழங்குனருக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. வழங்குனரால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 9,068,000 பெறுமதியான 15,772 கட்டில் விரிப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இந்த வழங்குனர் பல்வேறு பெயர்களில் தோன்றி இலங்கை தரைப் படைக்கு பல்வேறு வகையான பொருட்களை வழங்குவது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

## 4.5 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) பயங்கரவாதமற்ற ஏனைய வழிகளில் இடம்பெற்றிருந்த 233 சம்பவங்கள் தொடர்பில் ரூபா 233,124,624 தொகையான நட்டங்களும் சேதங்களும் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த நபர்களை இனங்கண்டுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக அந்த சம்பவங்கள், நட்டங்கள் சேதங்களை விட்டுவிடுதல் தொடர்பான கூற்றில் தொடர்ந்தும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன விபத்துக்கள் மூலம் இடம்பெற்றிருந்த சேத நட்டங்களை பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அதற்காக மூன்றாம் தரப்பு பொறுப்பாக காணப்படின் அவர்களிடமிருந்து அந்த நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக 74 விபத்துக்களினால் ஏற்பட்டிருந்த ரூபா 10,757,774 கூட்டுத்தொகையான நட்டச் சேதங்கள் 2014 ஆம் ஆண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.6 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீருடை பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உத்தியோகத்தர் - நிரந்தர தொண்டர் | 10,631 | 9,658 | 973 |
| ஏனைய தரங்கள் - நிரந்தர தொண்டர் | 187,019 | 177,235 | 9,784 |
| மொத்தம் | 197,650 | 186,893 | 10,757 |

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிவில் பதவியணியினர் தொடர்பான நிலைமை வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 11 | 08 | 03 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 06 | 02 | 04 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 198 | 144 | 54 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 6,386 | 6,758 | - | 372 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 4,537 | 4,127 | 410 | - |
| | மொத்தம் | 11,138 | 11,039 | 471 | 372 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 11,228 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை தரைப் படையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த 372 மேலதிக ஊழியர் தொடர்பில் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தரைப் படை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. தலைப்பு 223 – இலங்கை கடற்படை

### 5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

இலங்கை கடற் படையினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

| | |
|---|---|
| வாகனங்களை பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| கூறுவிலை கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டல் |

### 5.2 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்

இலங்கை கடற் படைக்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினா ஒன்றுக்கு 2015 யூலை 31 ஆந் திகதி வரை பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினா தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,085 மில்லியனாகும்.

### 5.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 செலவின விடயங்களிற்காக ரூபா 267,050,000 கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 179,183,297 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 87,866,703 அல்லது 33 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 223-1-2-2502(17) ஆம் செலவின விடயத்திற்கு நிதிப்பிரமாணம் 66 மாற்றீட்டுப் பத்திரத்தின் மூலம் ரூபா 6,250,000 நிதி- ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த மாற்றப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கட்டுநிதிக் கணக்கு

இலங்கை கடற் படையினால் பல்வேறு பணிகளிற்காகவும் வழங்கப்பட்டிருந்த செயல் நிமித்த உப கட்டுநிதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணி நிறைவேற்றப்பட்டவுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலம், 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 267,000 கூட்டுத் தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் பணி முடிவுற்று 03 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதம் செய்யப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தன.

(ஆ) 07 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 வீதம் வழங்கப்பட்டிருந்த உப கட்டுநிதிகள் 03 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலவீச்சில் கைவசம் வைத்திருக்கப்பட்ட பின்னர் முழுவதும் மீள தீர்க்கப்பட்டிருந்தன.

(இ) தேவையான தொகையினைக் காட்டிலும் கூடுதலான தொகை மதிப்பீடு செய்யப்பட்டு உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததனால் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கட்டுநிதியின் பகுதியொன்று செலவிடப்பட்ட பின்னர் சேமிப்பாக காணப்பட்ட ரூபா 13,000 முதல் ரூபா 650,000 இற்கு இடைப்பட்ட ஒரு பகுதி 3 ¼ மாதங்கள் முதல் 05 மாதங்கள் வரையான காலவீச்சில் கைவசம் வைத்திருக்கப்பட்ட பின்னர் தீர்க்கப்பட்டிருந்தமையால் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான வசதி வாய்ப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகள் கடந்த ரூபா 1,221,449 தொகையான 193 வைப்புக்கள் மற்றும் 2000 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,831,208 ஆன 15 பிடி காசு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 12,251,982 கடன் மீதிகள் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலவீச்சினை கடந்திருந்த போதிலும், அந்த கடன் மீதிகளை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

## 5.7 களஞ்சிய முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டில் இலங்கை கடற் படையினால் பேணப்பட்டிருந்த களஞ்சிய முற்பணக் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்கான கணக்குகள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதி இருப்பை கணிப்பிடுகையில் இடம்பெற்றிருந்த குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டிற்கு முன் கொண்டு வரப்பட்டிருந்த இலாபத்திற்கு ரூபா 22,539,274 செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஆரம்ப இருப்புக் கணக்கு பேரேட்டில் தயாரிக்கப்படாதிருந்ததுடன், வியாபாரக் கணக்கில்

காணப்படுகின்ற ஆரம்ப இருப்பிற்கு ரூபா 33,255,246 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 10,715,972 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 239,536 செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் இலாபம் அத் தொகையால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக அரசாங்க வங்கியொன்றில் திறக்கப்பட்டிருந்த நாணயக் கடிதத்திற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 342,130 வங்கிக் கட்டணங்கள் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய இறுதி இருப்பானது கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், இந்த முற்பண நடவடிக்கைகளின் போது தேறக்கூடிய நிகரப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது ரூபா 121,477,079 கிரயத்தில் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் கணக்காய்வுக்குச் சமர்டப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 35,689,764 சொத்துக்கள் மற்றும் ரூபா 126,785,534 பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5.8 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/09/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டு காலாண்டுக்கு ஒரு முறை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இரண்டு முறைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5.9 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவிலுள்ள குறைபாடுகள்

### வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலான நீண்ட தாமதங்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வங்கிக் கணக்கொன்றுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2014 செப்தெம்பர் மாதத்திலிருந்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.4.1(ஆ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அழைப்பு விடுக்கப்பட்ட சில விலை மனு தாரர்களிடமிருந்து பெறப்பட்ட கூறு விலைகள் ஒப்பிடப்பட்ட பின்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், இலங்கை கடற் படையால் ரூபா 2,656,859 பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்கையில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 யூன் 11 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்ட கலந்துரையாடல் குறிப்பு அறிக்கையின் 07 ஆவது விடயத்தின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் இலங்கை கடற்படைக்கு கிடைப்பதற்கு முன்னர் காசோலை எழுதப்படுதல் மற்றும் வழங்குனருக்கு காசோலைகளை வழங்குகின்ற முன்கூட்டிச் செலுத்தித் தீர்த்தல் முறை முழுமையாக பிழையான கொடுக்கல் வாங்கலாக இருந்தமையால் அதனை உடனடியாகத் திருத்திக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை கடற் படையினால் 2011 யூலை மாதம் முதல் 2014 ஏப்ரல் மாதம் வரையான காலத்தினுள் அந்த முறையினை பயன்படுத்தி 6,720 சந்தர்ப்பங்களில் ரூபா 2,091,960,398 செலவில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம், 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய தாபன பணிப்பாளர் நாயகத்தின் கடிதம், 2008 யூன் 28 ஆந் திகதிய அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரை என்பவற்றின் பிரகாரம் இலங்கை கடற் படையினால் வெளித்தரப்பினர்களிற்கு வழங்கிய சேவைகளிற்காக மீளாய்வாண்டில் உழைத்திருந்த ரூபா 1,048,089,448 வருமானம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை கடற் படைக்குச் சொந்தமான அரசாங்க காணிகளில் நடாத்தி வரப்படுகின்ற சிவில் உணவுச் சாலைகளை வெளித்தரப்பினர்களிற்கு வாடகைக்கு வழங்கி அறவிடப்பட்டிருந்த வாடகைகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரையின் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சிவில் நலன்புரிச் சங்க நிதியங்களிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த சிற்றுண்டிச் சாலைகளின் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களின் கொடுப்பனவுகளும் உபகரணக் கொள்வனவுகளும் திரட்டிய நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தன.

## 5.11 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கடற் படைக்கு 7,000 சோடி சப்பாத்துக்களை கொள்வனவு செய்கையில் முதற்தடவையாக கூறு விலைகள் கோரப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்த கூறுவிலைகளை நிராகரித்து இரண்டாவது தடவையாக கூறுவிலைகள் கோரப்பட்டு கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 5,980,744 தொகையினை மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) மீள தெம்பூட்டத்தக்க (Re-chargable) 20 Lead Acid பட்டறிகளை கொள்வனவு செய்கையில் கூறுவிலைகளில் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு முன்னர் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக முதற்தடவையாக கூறுவிலைகள் கோரப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்த கூறுவிலைகளைக் காட்டிலும் கூடிய விலைக்கு 4 ஆவது தடவையாக கோரப்பட்டிருந்த விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் இலங்கை கடற்படைக்கு ரூபா 115,001 தொகையினை மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(இ) இலங்கை கடற் படைக்கு 04 வகையான பொருட்களை கொள்வனவு செய்கையில் கூறுவிலைகள் கோரப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து கட்டளையினை சமர்ப்பிக்கும் வரை 06 மாத காலம் எடுக்கப்பட்டிருந்தமையால் முதலாவது கூறுவிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலையினைக் காட்டிலும் கூடிய விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமையால் ரூபா 698,510 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 5.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மின்சார பட்டியல்களிற்கு உரிய திகதிகளில் பணம் செலுத்தப்படாமை காரணமாக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 4,832,667 தண்டப்பணம் மீளாயட்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

### 5.13 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கடற் படையினால் 2011 ஆம் ஆண்டில் 5 கட்டளைகள் தொடர்பாக ரூபா 15,905,971 தொகை நிதிப்பிரமாணங்களிற்கு முரணாகவும் பிணைகளைப் பெற்றுக் கொள்ளாமலும் கட்டளைச் சந்தர்ப்பத்திலேயே செலுத்தப்பட்டிருந்ததுடன், 03 வருடங்கள் செல்கையில் வழங்கப்பட்டிருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 10,757,269 ஆகக் காணப்பட்டது. எஞ்சிய ரூபா 5,148,702 தொகையினை நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு அமைய வட்டியின்றி 12 தவணைக் கட்டணங்களில் 2014 யூன் மாதம் முதல் அறவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 5,148,702 தொகை தனியார் நிறுவனமொன்றின் பயன்பாட்டிற்கு வட்டியற்ற கடன் தொகையாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கடற் படைக்காக Pair an Operating Loup with Intergrated Light Source System இனை கொள்வனவு செய்கையில் ஒரு வழங்குனர் மாத்திரம் முன்வந்திருந்தமையால் ரூபா 479,500 விலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது தடவையாக வழங்குனர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 795,000 விலையினை ஏற்றுக் கொண்டிருந்தமை காரணமாக ரூபா 315,500 தொகையினை மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

### 5.14 மனித வள முகாமைத்துவம்

**முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள்**

இலங்கை கடற் படையினால் மீளாய்வாண்டில் இலங்கை கடலோர பாதுகாப்புத் திணைக்களத்திற்கு முழுநேர அடிப்படையில் 66 உத்தியோகத்தர்களும் 1,044 கடற்படையினரும் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களது வேதனாதிகள் கடற் படையினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 6. தலைப்பு 224 – இலங்கை வான்படை

### 6.1 ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை

இலங்கை வான்படையால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் வன்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்க வில்லை |
| (இ) ஆளுக்குரிய வேதனங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வில்லை |
| (ஈ) திணைக்கள வாக்குப்பண பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வில்லை |
| (உ) பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்க வில்லை |

### 6.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தலைமை அலுவலகத்தில் விமானப் படை நலன்புரி நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு மீளளிக்கப்பட்டிருந்த ரூபா 4,615,139 இற்காக 26 கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளின் மூலம் செய்யப்பட்டிருந்த கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்காக எந்தவொரு ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 6.3.1 பாதீட்டு முரண்

எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்பட்டிராமை, எதிர்பார்க்கப்பட்ட தேவைகள் ஏற்பட்டிருக்காமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மேம்படுத்தல்கள் இடம்பெற்றிருக்காமை போன்ற காரணங்களால் 35 செலவின விடயங்களில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 1,079,781,164 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

### 6.4 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இலங்கை வான்படையால் தீர்க்கப்படாதிருந்த ரூபா 5,893,112 கட்டுநிதி மீதிகளில் ரூபா 574,452 மீதிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வந்திருந்தது.

### 6.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த போதிலும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காலங்கடந்த ரூபா 2,267,879 பெறுமதியான 70 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கேள்வி விண்ணப்பதாரிகளின் மாதிரிகளின் தரப் பரிசோதனைக்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டிருந்த ரூபா 1,391,722 கட்டணங்கள், தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் பயனின்றி வைக்கப்பட்டிருந்ததுடன், 2 ஆண்டுகளைத் தாண்டிய பின்னர் அந்தக் கட்டணங்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 6.6 வருமானக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002(x) ஆம் இலக்க பொது நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் விமானப் படையின் விமானங்களின் வாடகை வருமானம் விமானப் படை தளபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு உத்தியோகத்தரால் அறவிடப்பட வேண்டிய போதிலும், சில விமானப் படை உத்தியோகத்தர்களால் தாபித்துக் கொள்ளப்பட்ட தனியார் கம்பனியொன்றினால் சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும். இக் கம்பனியின்

செயற்பாடுகளிற்காக விமானப் படைக்குச் சொந்தமாகவுள்ள பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அக் கம்பனி நிறுவன நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 1973 ஏப்ரல் 27 ஆந் திகதி பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விமானப் படைக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் 2 (சீ) பந்தியின் படி பணத்தை சேகரிக்கையில் பொது 172 பற்றுச்சீட்டு பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், விமானங்களின் வாடகை வருமானங்களை சேகரிக்கையில் மேற்படி தனியார் கம்பனியினால் அக் கம்பனியின் பெயர் குறிப்பிடப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் பயன்படத்தப்பட்டிருந்தன. அவ்வாறு அது தொடர்பிலான கட்டுப்பாடு அக் கம்பனிக்கு காணப்படுகின்றதா என்பது குறித்து கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தமையாலும், கம்பனியின் கணக்கிற்கு சேகரிக்கப்படுகின்ற வருமானங்களை விமானப் படையின் கணக்குகள் பிரிவுக்கு அனுப்பிவைப்பதற்கு நீண்ட காலம் எடுக்கப்பட்டிருந்தமையாலும், அரசாங்கத்திற்கு கிடைத்திருக்க வேண்டிய அனைத்து வருமானங்களும் அரசாங்கத்திற்கு உரியவாறு செலவு வைக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்த வருமானங்களினதும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டியுள்ள வருமானங்களினதும் சரியான தன்மை குறித்து கணக்காய்வில் திருப்திப்பட முடியவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 177(3) இன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற சகல தொகைகளும் அனுப்பிவைக்கப்பட்டு அதற்காக பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி மீளாய்வாண்டில் கம்பனியினால் சேகரிக்கப்பட்டிருந்த விமான வாடகைகளின் மொத்தத் தொகையில் ரூபா 23,039,444 தொகை 20.03.02.16 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்படாது அரசாங்க கணக்கல்லாத நிறைவேற்று நலன்புரி நிதியம் என்ற விமானப் படையின் உள்ளக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 6.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூன்றாம் பட்டோலையின் படி அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த பெறுவனவுகளின் எல்லை ரூபா 390,000,000 ஆனதுடன், உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 352,302,705 ஆனமையால் ரூபா 37,697,295 ஆல் ஆகக்குறைந்த எல்லை அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்படி முற்பணங்கள் கணக்கின் மீதி ரூபா 576,211,703 ஆன போதிலும், 2014 ஆம் ஆண்டில் அதன் ஆரம்ப மீதியாக ரூபா 592,396,210 காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 16,184,507 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் அல்லது சீராக்கல் குறிப்புக்கள் இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆண்டிறுதியில் காணப்பட்ட மீதி இணக்கக் கூற்றில் காட்டப்படாதிருந்ததுடன், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணப்பீடுகளின் படி இணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 477,229,686 தொகை எனவும், கட்டுப்பாட்டுக் கணக்கு, தனிப்பட்டோர் கணக்குகள், உத்தியோகத்தர்களின் கட்டமைப்பின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் மற்றும் முற்பண வகைகளின் படி தயாரிக்கப்பட்ட தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பு என்பவற்றின் பிரகாரம் முறையே ரூபா 471,407,746, ரூபா 433,633,765 ரூபா 456,290,525 மற்றும் 456,908,335 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. அதற்கமைய, கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆரம்ப மீதி, ஆண்டின் போதான பெறுவனவுகள், அறவிடுதல்கள் மற்றும் இறுதி மீதி என்பவற்றின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியவில்லை. மேலும், 1981 ஆம் ஆண்டு முதல் நிலவி வருகின்ற பழைய மீதிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

விமானப் படையின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு அப் பெறுமதிகள் ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ – 4 ஆம் படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதியுடன் இணங்கியிருக்க வேண்டிய போதிலும், அவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| விபரம் | டீஜீஎஸ்ஏ – 4 ஆம் படிவத்தின் படி பெறுமதி | நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாகனங்கள் | 26,920,545 | 357,575,553 | 330,655,008 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 107,323,743 | 26,440,848 | 80,882,895 |

| | | | |
|---|---|---|---|
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 736,201,713 | 246,284,593 | 489,917,120 |
| கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 288,147,507 | - | 288,147,507 |

நிதி ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தமை இதற்கமைய அவதானிக்கப்பட்டதுடன், இந்த முரண்களிற்குத் தாக்கமளித்த காரணங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

விமானப் படையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாதுள்ள ரூபா 3,949,117,296 பொறுப்புக்களிற்குரிய காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதியன்று காணப்பட்ட ரூபா 4,278,066,949 பொறுப்புக்கள் தீர்க்கப்பட்ட முறை, மீளாய்வாண்டில் பொறுப்புக்கள் தோன்றிய முறை மற்றும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று காணப்பட்ட ரூபா 3,949,117,296 பொறுப்புக்களிற்குரிய காலப்பகுப்பாய்வு தொடர்பில் கணக்காய்வில் உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும், மீளாய்வாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நிலவிய பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் அந்தந்த ஆண்டுகளிற்குரிய ஒதுக்கீட்டு (வாக்குப்பணப் பேரேடு) செலவினப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இலங்கை விமானப் படையால் மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 94 (1) மற்றும் நிதிப்பிரமாணம் 94(2) இற்கு இணங்காது முறையே ரூபா 570,140,498 மற்றும் ரூபா 47,694,850 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 6.9 வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூலை மாதத்திற்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரித் தொகைகளை செலுத்துதல் தொடர்பில் 50 உத்தியோகத்தர்களுடன் சம்பந்தப்பட்ட மாதிரிகளின் பரிசோதனையின் போது வரியினைக் கணிப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய சில படிகள் கருத்திற் கொள்ளப்படாது உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 யூலை மாதத்தில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ரூபா 39,667 உழைக்கும் போதே செலுத்தும் வரியாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், தொடர்புடைய அனைத்து படிகளையும் கருத்திற் கொண்டு வரியினைக் கணிப்பிட்டதில் ரூபா 55,686 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. அதற்கமைய, அந்த மாதம்

தொடர்பில் ரூபா 16,019 உத்தியோகத்தர்களின் சம்பங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியாக கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014/2015 உழைக்கும் போதே செலுத்தும் 02 ஆம் இலக்க இறைவரி சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் படி ஒவ்வொரு உத்தியோகத்தராலும் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினைக் கணிப்பிடுகையில், ஒரு தடவை செலுத்தப்படுபவையாக கருதப்படுகின்ற மருத்துவச் செலவு மீளளித்தல் தொகை சராசரி மொத்த மாதாந்த உழைப்பின் விகிதாசாரத்திற்கு அமைய வரிக்காக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், விமானப் படை உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கணிப்பிடுகையில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

விமானப் படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய தன்மையான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘ரணவிரு ரியல் ஸ்டார்’’ நிகழ்ச்சியின் இறுதிக் கட்டத்தில், விமானப் படையிலிருந்து பங்குபற்றியிருந்த போட்டியாளர்களை முன்நிலைக்கு கொண்டு வருவதற்காக அவர்களது இலக்கங்களிற்கு குறுஞ் செய்திகளை அனுப்பிவைப்பதற்கு விமானப் படைக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 20,905,290 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 95 இன் பிரகாரம் இலங்கை விமானப் படைக்கு சிவில் ஊழியர்களை ஆட்சேர்த்து அந்த ஊழியர்கள் விமானப் படையின் பணிகளிற்கு அப்பாற்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களிற்கு விமானப் படைக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து 2013 ஆம் ஆண்டில் ரூபா 15,885,588 தொகையும் 2014 சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 15,647,619 தொகையும் சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2004 நவம்பர் 19 ஆந் திகதிய பீடீ/என்எவ்/103/03/09/30 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வெளித் தரப்பினர்களிற்கு சேவைகளை வழங்கி ஈட்டப்படுகின்ற வருமானங்கள் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், விமானப் படையின் பௌதீக மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி நடாத்திச் செல்லப்படுகின்ற 96 நிதியங்களிலிருந்து ஈட்டப்பட்ட வருமானங்கள் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்படாது விமானப் படை நிதியங்கள் கணக்குகளிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தன.

## 6.11 அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டத்தினை தயாரிக்கையில் கொள்வனவு நடவடிக்கைகளிற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,245,614,412 மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 8,131,968,000 மீண்டெழும் செலவினம் என்பன அந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மூலதனச் செலவுகள் சம்பந்தமாக திட்டமிடப்பட்ட முறையில் கொள்வனவு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் அறிக்கைகளை பேணுதல் அல்லது கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியன இடம்பெற்றிருக்கவில்லை.

விமானப் படைக்கு வாடகை வாகனங்களைப் பெறுகையில் செயற்பட வேண்டிய முறைகள் 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய SLAF/1540/7/DGE/MT ஆம் இலக்க பணிப்பாளரின் (பொது பொறியியல்) கடிதத்தினால் அதற்கான அடிப்படை நிபந்தனைகளும் விதிகளும் குறிப்பிடப்பட்டு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். அதற்கமைய, விமானப் படையின் உத்தியோகத்தர்களிற்கு 15 பெற்றோல் வாடகை வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2014 செப்தெம்பர் 17 ஆந் திகதி அமைச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்த வழங்குனர்களிடமிருந்தும், தொலைபேசி விபரக் கொத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வழங்குனர்களிடமிருந்தும், விமானப் படையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படுவதன் மூலமும் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

விமானப் படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் 15 உறவினர்கள் குறைந்த விலைகளை சமர்ப்பித்திருந்தமையால் மாதமொன்றுக்கு ரூபா 50,000 வீதம் வாடகை செலுத்தும் அடிப்படையில் மேற்படி விமானப் படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் 15 உறவினர்களிற்கு இக் கொள்வனவு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய உடன்படிக்கைகளிலுள்ள கொள்வனவு நிபந்தனைகளிற்கு அமைய முற்பணங்கள் செலுத்தப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நிபந்தனைகளிற்கு உட்பட்டு வழங்குனர்களினால் ஓராண்டிற்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இருப்பினும் குறித்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் விமானப் படையால் ஓராண்டிற்கான வாடகையாக ஒருவருக்கு ரூபா 600,000 வீதம் 15 பேர்களிற்கு ரூபா 9,000,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 7. தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்

### 7.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 7.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 7.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வதிவோர் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுதல் ஆரம்பிக்கப்படாமை காரணமாக அந்த செலவின விடயத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நான்கு செலவின விடயங்களிற்காக ரூபா 52,699,228 கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 58 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

### 7.3 வருமானங்கள் கணக்கு

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரான கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு 20.03.02.07 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி மேற்படி வருமானக் குறியீட்டிலிருந்து ரூபா 7,173 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 8,151 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தைக் காட்டிலும் ரூபா 978 மில்லியன் அல்லது 13.63 சதவீதத்தை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் மார்ச், யூன், ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரிய வீசா வருமானம், வருமானக் காசுப் புத்தகத்தின் படி ரூபா 181,855,041 ஆக காணப்பட்டது. திணைக்களத்தின் கணனி முறைமையின் படி வீசா வருமானம் ரூபா 184,141,215 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 2,286,174 வேறுபாடு காணப்பட்டது.

## 7.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 2,132,277 கடன் மீதிகள் 06 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலவி வந்திருந்த போதிலும், அக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 7.5 செயலாற்றல்

### போதியளவில் அடையப்படாத பிரதான பணிகள்

இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகள் 2011 சனவரி 28 ஆந் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் மீது 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த 259 சான்றிதழ்கள் உள்ளடங்கலாக 2011 சனவரி 28 ஆந் திகதி முதல் 2014 இறுதி வரை 2,053 இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்காக 2014 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 33,950,000 வருமானம் உள்ளடங்கலாக 2011 சனவரி 28 ஆந் திகதி முதல் 2014 இறுதி வரை ரூபா 230,850,000 மொத்த வருமானம் திணைக்களத்தினால் ஈட்டப்பட்டிருந்தது.

## 7.6 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குடிப்பெயர்வுகளிற்கான இலத்திரனியல் அங்கீகாரமளித்தல் முறைமையினை தாபித்தல் தொடர்பான உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி குறித்த இணைய தளத்தின் வடிவமைப்பாளருக்கு அந்த இணைய தளத்தில் தனிப்பட்ட பிரச்சாரத்திற்காக அனுமதி

வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு முரணாக, இலங்கையில் செயற்படுகின்ற தனியார் தொலைபேசிக் கம்பனியொன்று அந்த இணையதளத்தில் அதனது உத்தியோகபூர்வ இலச்சினையை காட்சிப்படுத்தியிருந்தது. 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் கடிதத்தின் படி அந்த இணையதளத்தில் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கு கேள்வி கோரப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய அது தொடர்பான வரைபு கேள்விப்பத்திரங்களை தயாரித்து சமர்ப்பிக்குமாறு 2014 மார்ச் 25 ஆந் திகதி பாதுகாப்பு செயலாளரினால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 வரை திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரச்சாரம் செய்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் கணனி முறைமையில் காணப்பட்ட சில அறிக்கைகளில் எவ்விதத் தரவுகளும் காணப்படுவதில்லையென்பது அந்த அறிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

(இ) இலங்கையில் வீசா இன்றி தங்கியிருக்கின்றமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் 7.6.7 பீ ஆம் இலக்க கணனி அறிக்கையின் படி 2012 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீசா இன்றி நாட்டில் தங்கியிருந்த 12,816 வெளிநாட்டவர்களில் 3,801 பேர் 2014 ஆம் ஆண்டில் வீசா இன்றி வருகைதந்த வெளிநாட்டவர்களாவர்.

(ii) மூன்றாண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக வீசா இன்றி தங்கியிருந்தமை காரணமாக நாட்டிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறு தங்கியிருப்போரை சுற்றிவளைத்து கைது செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுகள் சம்பந்தமான போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் நிலைய மற்றும் புலனாய்வு பிரிவுக்காக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செயற்பாடு கையேட்டின் படி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல், தகவல்கள் சேகரிக்கப்படுதல் மற்றும் வாய்மொழிகள் பதிவுசெய்யப்படுதல் இடம்பெறுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 60 | 50 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 399 | 366 | 33 |
| (iii) | இரண்டாம் நிலை | 429 | 362 | 67 |
| (iv) | ஆரம்ப நிலை | 131 | 122 | 09 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | 1,021 | 902 | 119 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 119 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 8. தலைப்பு 227 – ஆட்பதிவுத் திணைக்களம்

### 8.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

திணைக்களத்தினால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 8.2.1 பாதீட்டு முரண்

இரண்டு செலவின விடயங்களுக்கு ரூபா 1,611,162 கூட்டுத்தொகையான மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களுடன் தொடர்புடைய தேறிய நிதி ஏற்பாட்டின் 59 சதவீதத்திற்கும் 86 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### 8.3 வருமானங்கள் கணக்கு

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரான ஆணையாளர் நாயகத்திற்கு 20.03.02.03 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் பணிகள்

பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி மேற்படி வருமானக் குறியீடு தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 92 மில்லியன் வருமானத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 102.46 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 111.37 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**8.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,356,935 கடன் மீதிகள் 06 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**8.5 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டத்திலிருந்து இலத்திரனியல் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணி 2015 மே 31 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்படாமை தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குதல் செயற்திட்டத்திற்காக ரூபா 314,199,087 செலவிடப்பட்டதன் பின்னர் 2009 செப்தெம்பர் 09 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 14.5 பில்லியன் மதிப்பீட்டின் மீது மீண்டும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பரீட்சார்த்த செயற்திட்டமொன்று 2014 ஆம் ஆண்டில் தென் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அதன் கீழ் 27 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அத் தரவுகளை கணனியில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. .

(இ) இரண்டாவது தடவை செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 708,141,519 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆட்களை பதிவுசெய்யும் அதிகாரச்சட்டத்தின் கீழ் இலத்திரனியல் தரவுகளைச் சேகரிப்பதற்கும் அதிகாரச்சட்டத்துடன் தொடர்புடைய ஏனைய திருத்தங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்

தாமதமடைந்தமையின் காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மந்த கதியில் காணப்பட்டன.

**8.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 17 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,195 | 999 | 196 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 97 | 42 |
| | மொத்தம் | 1,363 | 1,114 | 249 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 249 வெற்றிடங்களில் 223 வெற்றிடங்கள் ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக காணப்பட்ட போதிலும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

## 9. தலைப்பு 291 – கரையோரம் பேணல் திணைக்களம்

**9.1 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில ஏடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | ஏடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் வன்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணக்காய்வு ஐயவினா பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | திணைக்கள (வாக்குப்பண) ஒதுக்கீட்டு பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் முதலியவற்றுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (x) | அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xi) | ஒப்பந்த பதிவேடு | நிதிப்பிரமாணம் 781 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xii) | வாகன லொக் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(இ) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xiii) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xiv) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xv) | கொள்வனவுக் குழுக்களினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினதும் வருகைகள் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 9.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாரவில-தலவில இல் 03 நீர் வழிந்தோடும் கட்டுக்களை நிர்மாணிப்பதற்காக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,352,000 பெறுமதியான 500 கற் தொகுதிகள் பயன்படுத்தப்பட்டிருந்த வேலை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உனவடுன மணல் போசணை செயற்திட்டத்திற்குத் தேவையான குழாய்களை நிறுவுதல் மண்டபத்தினை நிர்மாணிக்கையில் காலி பிரதேச செயலகத்தில் காணப்பட்ட

ரூபா 209,120 கூட்டுத்தொகையான கலவைக் கற்கள் 09 மீற்றர் கியூப்கள், 1.5 தொன் அளவுடைய 190 கற் தொகுதிகள் என்பன மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாத விதத்தில் ஒப்பந்தக் கம்பனி பயன்படுத்தியிருந்ததாக 2015 மார்ச் 31 ஆந் திகதிய வெசங்/கா/01/50 ஆம் இலக்க காலி பிரதேச பொறியியலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த பொருட்கள் முறைப்படி கையளிக்கப்பட்டமையினை அல்லது குறித்த கம்பனி கையேற்றிருந்தமையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.3 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 5 கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்டிருந்த 02 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் 2015 மார்ச் 31 வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 282,284,953 ஆகும்.

## 9.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 9.4.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,644,063,900 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 401,356,024 சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் தொடக்கம் 72 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 9.5 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 17 பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களிற்கு 50 சந்தர்ப்பங்களில் ரூபா 573,113 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பதிவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய உச்ச பணி நிமித்த உபகட்டுநிதி ரூபா 20,000 ஆன போதிலும், அந்த பிரமாணங்களிற்கு முரணாக 50 சந்தர்ப்பங்களில் 13 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 2,276,313 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(இ) முறைப்படியான அங்கீகாரமின்றி ரூபா 5,000 இனை விஞ்சி ரூபா 408,400 சில்லறைக் காசுக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**9.6 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளைக் கடந்த ரூபா 14,192,819 கூட்டுத்தொகையான 76 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொது வைப்புப் பேரேடு தீர்க்கப்படாதிருந்ததுடன், பொது வைப்புக் கணக்கின் மீதி தனிப்பட்டோர் மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 படிவத்திற்கமைய மாதாந்த வைப்புக்களின் பொழிப்பறிக்கை தயாரிக்கப்பட்டு எதிர்வரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**9.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

29101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,595,416 ஆக காணப்பட்டதுடன், இந்த நிலுவையிலிருந்த மீதிகள் 03 மாதங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சுக் கொண்டவையாக காணப்பட்ட போதிலும், அக் கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

## 9.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 9.8.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக முறையானதும் முழுமையானதுமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டடிருக்கவில்லை.

### 9.8.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் முறையானதும் முழுமையானதுமான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.8.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## 9.9 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான காலமாக இருந்துவந்திருந்த திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 9,636,463 ஆக இருந்தது. அப்பொறுப்புக்களில் ரூபா 5,067,933 தொகை 2015 மே 21 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 9.10 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| (i) 2011 இன் 49 ஆம் இலக்க கரையோரப் பேணல் திருத்திய அதிகாரச்சட்டத்தின் 31(1), (2), (4) ஆம் பிரிவுகள் | - | அனுமதியற்ற நிர்மாணங்கள் செய்யப்படக் கூடாதென்பதுடன், குறித்த காலத்தினுள் அவ்வாறான நிர்மாணங்களை அகற்றிக் கொள்ளுதல் வேண்டுமென்றும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு ஏற்பட்ட செலவினம் உரிமையாளரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டுமென்றும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 146 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அனுமதியற்ற 08 நிர்மாணங்கள் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தன. |
| (ii) 2011 இன் 49 ஆம் இலக்க கரையோரப் பேணல் திருத்திய அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு | | கரையோர பாதுகாப்பு வெகுமதி நிதியம் என்ற பெயரிலுள்ள நிதியத்திற்காக அறவிடப்படுகின்ற சகல தண்டப் பணங்களும் செலவு வைக்கப்பட்டு அக் கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 103(1)(ஆ) | | மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 2 வாகன விபத்துக்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(1) | | நட்ட இழப்பொன்று இடம்பெற்றவுடன் அதற்குப் பொறுப்பானவர்களை நிச்சயிப்பதற்காக விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 07 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக எவ்வித விசாரணையும் நடாத்தப் பட்டிருக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக திருத்தச் செலவினம் |

| | | | |
|---|---|---|---|
| | | | காப்புறுதி இழப்பீட்டிலிருந்து தீர்க்கப்பட்டிருந்ததுடன், காப்புறுதியிலிருந்து கிடைக்காத தொகை திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது. |
| | (iii) நிதிப்பிரமாணம் 215(3)(இ) | 41,691,685 | நிதியாண்டினுள் நாணயக் கடிதங்கள் மூலம் வெளிநாட்டுக் கம்பனிகளிற்கு அவற்றிடமிருந்தான கொள்வனவுகளிற்காக செலுத்த வேண்டிய தொகை திறைசேரியின் அங்கீகாரத்துடன் வைப்புக் கணக்கில் வைப்பிட வேண்டிய போதிலும், சர்வதேச கம்பனியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2014 யூன் 16 ஆந் திகதிய 16/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர்களிற்கே உத்தியோகபூர்வ வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவினதும் பெயரிலும் பிரதேச அலுவலகங்களின் பெயரிலும் 17 வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்தன. |

## 9.11 உள்நாட்டு நிதிகளிலிருந்து செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூரணப்படுத்த வேண்டிய திகதி | பூரணப்படுத்திய திகதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடி செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| மாரவில – தலவில நீர்வெட்டினை நிர்மாணித்தல் | 40,271,074 | 2012.02.24 | 2013.10.22 | 2014.01.22 | 40,271,074 | இயந்திரங்களின் இயலளவு பிரச்சினை தாக்கமளித்திருந்தது. |
| உனவடுன நிர்வெட்டிலிருந்து ஒரு பகுதியை கழற்றி அகற்றுதல் | 36,900,000 | 2015.02.23 | 2015.05.07 | பூரணப்படுத்தவில்லை | 16,588,395 | ஒப்பந்தக் காரரின் வினைத்திறனின்மை தாக்கமளித்திருந்தது. |

## 9.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாரவில – தலவில கடற்கரை மணல் போசணை செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 350 மில்லியனாக காணப்பட்ட போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் மதிப்பீட்டைக் காட்டிலும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட கூறுவிலைகளாக காணப்பட்டமையால் மதிப்பீட்டு விலைகளின் சரியான தன்மை சிக்கலுக்குரியவையாக காணப்பட்டன.

(ஆ) கடற்கரையில் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்றிற்கு 2013 திசெம்பர் 23 ஆந் திகதிய DO/2013/2278 ஆம் இலக்க உடைத்து அகற்றும் கட்டளை வழங்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு வேலியொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி மீண்டும் வழங்கப்பட்டிருந்த உடைத்து அகற்றும் கட்டளையின் படி கட்டிடம் முழுவதும் உடைத்து அகற்றப்பட வேண்டிய போதிலும், 04 மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தின் 02 மாடிகள் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. இதற்கமைய, இக் கட்டிடம் சம்பந்தமாக கடலோர பாதுகாப்பு கண்காணிப்பாளர், திட்டமிடல் உதவியாளர் மற்றும் பிரதேச பொறியியலாளர் ஆகியோரின் அவதானிப்புக்களைப் புறக்கணித்து செயற்பட்டிருந்தமை, தடை உத்தரவு வழங்கப்பட்டிருக்கையில் மீண்டும் மீண்டும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் கட்டிடத்தின் இரண்டு மாடிகள் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தமை போன்றன கணக்காய்வில் சிக்கலுக்குரியவையாக காணப்பட்டன.

## 9.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகுதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னர் கொள்வனவு நிறுவனத்தினால் ஆரம்ப சுற்றாடல் ஆய்வு அறிக்கையொன்றை

பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மணல் போசனை மற்றும் அலைதாங்கியை நிர்மாணித்தல் தொடர்பில் திணைக்களம் அவ்வாறான மதிப்பீட்டு அறிக்கை கொள்வனவுச் செயன்முறையின் இறுதிக் கட்டத்தில் பெற்றுக்கொண்டிருந்தது.

(ii) மாரவில – தலவில அலைதாங்கியை நிர்மாணிப்பதற்காக ரூபா 12,725,000 இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்கையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.12.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒரு வழங்குனருக்குப் பதிலாக பலர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன், குறித்த ஒப்பந்ததாரரின் இயந்திர உபகரணங்களை வழங்குவதற்கான சாத்தியம் தொடர்பில் ஆரம்ப ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் சர்வதேச போட்டி கூறுவிலை கோரல் கொள்வனவு நடைமுறையின் கீழ் 42 நாட்கள் கூறுவிலைகளைச் சமர்ப்பித்தற்கான குறைந்தபட்ச காலம் தொடர்பில் கருத்திற்கொள்ளாது உனவடுன கடற்கரை மணல் போசனை செயற்திட்டத்திற்கும் மாரவில் - தலவில மணல் போசனை செயற்திட்டத்திற்கும் கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்காக முறையே 18 நாட்கள் மற்றும் 28 நாட்கள் என காலம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.11.3 மற்றும் 8.11.4(iii), (iv) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் ரூபா 107,530,000 பெறுமதியுடைய மாரவில – தலவில அலைதாங்கி மற்றும் ரூபா 600,000,000 பெறுமதியுடைய உனவடுன கடற்கரை மணல் போசனை செயற்திட்ட நிர்மாண ஒப்பந்தத்தினை திருப்தியடைக்கூடிய விதத்தில் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்ததுடன் திணைக்களத்தினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த நிறுவனம் தவறியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 9.3.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மேற்பட்ட திருத்தங்களைச் செய்வதற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 2 சந்தர்ப்பங்களில் வாகனத்

திருத்தங்களிற்காக ரூபா 765,590 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், குறித்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 9.14 இழப்புக்களும் சேதங்களும்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) மாரவில – தலவில அலைதாங்கி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 4,000,000 தொகை ஒப்பந்தக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமையால் வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 9,757,845 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,000,000 தொகை 2015 யூன் 09 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அலைதாங்கியை நிர்மாணிப்பதற்காக 2,764 சதுரக் கற்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2,264 சதுரக் கற்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் எஞ்சிய 500 சதுரக் கற்கள் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச பொறியியலாளர் தவறியிருந்தார்.

### (ஆ) மாரவில – தலவில கடற்கரை மணல் போசனை செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி செயற்திட்டம் தொடர்பில் கோரப்பட்டிருந்த கூறுவிலைகளுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் படி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்த கம்பனியினை புறக்கணித்து இரண்டாவது குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி பரிந்துரைக்கப்பட்டிருந்தது. குறைபாடுகளைக் குறிப்பிட்டு குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த கம்பனியை மதிப்பீட்டிற்கு உட்படுத்தாது எஞ்சிய இரண்டு கம்பனிகளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, ரூபா 527,563,424 குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த கம்பனியின் குறைபாடுகளை

செயற்திட்டத்தின் தேவைப்படுகளிற்கு இணங்கும் விதத்தில் கலந்துரையாடியிருப்பின் மீண்டும் கூறுவிலைகளைக் கோருவதற்கு செலவிடப்பட்டிருந்த காலத்தினையும் செலவினத்தினையும் சேமிப்பதற்கு திணைக்களத்திற்கு முடிந்திருக்கும். அவ்வாறே, இந்த விலையினைக் காட்டிலும் கூடிய பெறுமதிக்கு அதாவது ரூபா 617,394,960 இற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 89,831,536 ஆகும்.

(ii) நிதி ஏற்பாடு போதாதிருந்தமையால் கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கொள்வனவை மேற்கொள்கையில் மதிப்பிடப்பட்ட விலை ரூபா 500 மில்லியன் வரை மாற்றப்பட்டிருந்த போதிலும், அத் தொகைக்கும் மேலாக குறித்த கம்பனி விலைகளைச் சமர்ப்பித்திருந்தமையால் குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த கம்பனியுடன் கலந்துரையாடி 3 மாற்று விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த முதலாவது மாற்றுவிலையின் செல்லுபடியாகும் காலம் 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி என்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களம் அக் காலத்தினுள் ஒப்பந்தத்தினைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 116,933,544 ஆகும்.

**(இ) அலைதாங்கி நிர்மாணித்தல் மற்றும் மணல் போசனை செயற்திட்டம்**

அலைதாங்கி நிர்மாணித்தல் மற்றும் மணல் போசனை ஒப்பந்தத்திற்காக ஒப்பந்ததாரர்களுடன் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கைக் காலத்திற்கேற்ப வேலைகள் பூரணப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைப் பெறுமதியில் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் நான்கு வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,488,276 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 9.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

அலைதாங்கியை நிர்மாணிப்பதற்கு முன்னர் எவ்வித சுற்றாடல் தாக்கம் குறித்த மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படாமை மற்றும் வனச் சீவராசிகள் பரிபாலன திணைக்களத்தின் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படாமை

காரணமாக 2013 ஆம் ஆண்டில் ரூபா 66,929,783 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உனவடுன அலைதாங்கியிலிருந்து ஏறத்தாழ 100 மீற்றர்கள் அளவு உடைத்து அகற்றப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம், உடைத்து அகற்றல் மற்றும் ஏனைய செலவினத்திற்காக ரூபா 50,102,387 செலவிடப்பட்டிருந்தது.

### 9.16 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்படாதிருந்த பந்திகளுடனான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2011 | 1.3(ஈ) | கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாமை. |
| 2012 | 1.4.2 | |
| 2012 | 1.4.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படாமை. |
| 2013 | **1.6 (அ)** (i) | ரூபா 5,991,496 செலவில் அனுமதியற்ற நிர்மாணங்களை உடைத்து அகற்றுவதற்கு 326 கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித உடைத்து அகற்றல்களும் இடம்பெற்றிருக்காமை. |
| | **1.6 (அ)** (ii) | யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கிக்கொள்வதற்கு மாவட்டச் செயலாளருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ரூபா 825,000 செலுத்தப்பட்டிருந்தமை. |
| | **1.6 (அ)** (iii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிராமை. |

1.7 (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களை தவறியோர் பட்டியலில் உள்ளடக்காமை.

1.7 (இ) நிர்ணயித்த திகதியில் வேலைகளை பூரணப்படுத்தாத காரணத்திற்காக ரூபா 10,753,000 தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்காமை.

1.10(ஆ) திணைக்களத்திற்கு சொத்துக்களை கையேற்கையில் பொருத்தமான நடைமுறையொன்றை பின்பற்றியிருக்காமை காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 4,092,264 தொகையான நட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை.

1.10(ஈ) வாகனமொன்றை திருத்துவதற்காக ரூபா 1,324,656 மதிப்பீடொன்றை பெற்று சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மதிப்பிடப்பட்ட தொகையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 500,000 தொகைக்கு உரிய சேவை பெற்றுக் கொள்ளப்படாதிருந்த போதிலும், அதனை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

1.13(அ) கெபுன்கொட நீர்வெட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேறாத விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை காரணமாக ஒரு பகுதி உடைத்து அகற்றப்பட்டிருந்தமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 25,781,265 நட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

## 9.17 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 26 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 331 | 240 | 91 |
| (iv) | ஆரம்ப நிலை | 174 | 113 | 61 |
| | மொத்தம் | 546 | 380 | 166 |

**10. தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

**10.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| உத்தியோகபூர்வ தொலைபேசி பதிவேடு | நிதிப் பிரமாணம் 845(1) |
| பிணைகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| அடியிதழ்சேர் புத்தகங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 |
| பொறுப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**10.2 எல்லைகளை பின்பற்றியிருக்காமை**

32001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஆகக்குறைந்த செலவு எல்லை ரூபா 155,000,000

ஆனதுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 153,108,942 ஆக காணப்பட்டமையால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 1,891,058 ஆல் அணுகப்பட்டிருக்கவில்லை.

**10.3 கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுநிதிக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,910,362 மீதி காணப்பட்டதுடன் அதில் ரூபா 19,748,314 மீதி 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி நிறைவேற்றப்பட்டவுடன் செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 22 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 18,090,887 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி பணி முடிவுற்று 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,850,000 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அந்த முற்பணங்களை அத் திகதிகளில் தீர்க்காது 08 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

**10.4 பொது வைப்புக் கணக்கு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு பணிகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 39,569,563 குறித்த பணிகளை நிறைவேற்றாது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**10.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**10.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

சனாதிபதி செயலகத்தினால் முறையான அங்கீகாரமின்றி 16 வாகனங்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் 2015 யூன் 08 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாது ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 163,552,721 பொறுப்புக்கள் காணப்பட்டன.

**10.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை விமானப் படையின் கலையக மண்டபத்தில் இடம்பெற்ற ''ரணவிரு ரியல் ஸ்டார்'' நிகழ்ச்சியின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 773,254 பெறுமதியான 02 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் அதற்காக பயன்படுத்தப்பட்ட பின்னர் 18 மாத காலமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) வாடகை கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற திணைக்களத்தின் தலைமையக கட்டிடத்தின் பூங்கா மண்டப கூரையினை திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,726,286 தொகையை கட்டிட வாடகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**10.8 சேதங்களும் இழப்புக்களும்**

2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்தினால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 179,820 ஆகக் காணப்பட்டது.

**10.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

சிவில் பாதுகாப்பு படையினருக்கு ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்குதல் எனக் குறிப்பிட்டு செயற்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த ரூபா

13,184,149 வருமானத்திலிருந்து செலவிடப்பட்டு 2014 நவம்பர் 22 ஆந் திகதி இடம்பெற்ற வைபவத்தில் கையளிக்கப்பட்டிருந்த நியமனக் கடிதங்கள் மூலம் அவர்கள் நிரந்தரச் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை.

### 10.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் 2013 பெப்ரவரி 19 ஆந் திகதி 40,000 லென்யார்ட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,736,000 இற்கு கையளிக்கப்பட்டிருந்த கேள்விக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டிருக்காத 4,250 லென்யார்ட்களிற்காக உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 32,869 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வேலைத்திட்டங்களால் உழைக்கப்பட்டிருந்த வருமானங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரையின் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசியலமைப்பின் 150 ஆவது உறுப்புரைக்கு முரணாக அந்த வருமானத்திலிருந்து ரூபா 9,457,520 செலவில் வீடியோ கெமராவும் துணைப்பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

### 10.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 09 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 10 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 13 | 08 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 30 | 25 | 05 | - |
| (v) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 30 | 33 | - | 03 |
| (vi) | சிவில் பாதுகாப்பு படையணி | 40,000 | 39,711 | 289 | - |
| | மொத்தம் | 40,112 | 39,801 | 314 | 03 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலவிய 314 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆட்சேர்க்கப்பட்டிருந்த மேலதிக ஊழியர் மூவருக்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 11. தலைப்பு 325 – இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்

### 11.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் திறைசேரியினால் எதிர்பார்க்கப்பட்டவாறு திணைக்களத்திற்கு கட்டுநிதி வழங்கப்பட்டிருக்காமை காரணமாக 04 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,645,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 5,311,270 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 4,333,730 நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாது போயிருந்தது.

(ஆ) செலவின விடயமொன்றுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 300,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 11.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்படாது 01 வருடத்திற்கும் குறைவான காலத்தில் நிலவிய ரூபா 6,882,502 பொறுப்புக்கள் காணப்பட்டன.

### 11.3 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த விபரங்களின் பகுப்பாய்வின் படி வழங்கப்பட்டிருந்த போதிலும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காலம் கடந்திருந்த ரூபா 28,200 கூட்டுத்தொகைப் பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**11.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் பீவீசீ உபகரணங்கள், மரம், இரும்பு, பிளைவூட் சீட், எஸ்பெஸ்ரஸ் சீட் மற்றும் மின்சார உபகரணங்களை கொள்வனவு செய்கையில் ஒரே வகையான பொருட்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் ஒரேயொரு நிறுவனத்திடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் பல்வேறு விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையும் அவற்றின் விலைகளில் காணப்பட்ட வேறுபாடுகள் பாரிய வீச்செல்லையில் பரவிக் காணப்பட்டமையும் தற்போதைய சந்தை விலைகள் மற்றும் இலங்கை கடற்படையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த விலைகளை விஞ்சி உயர்ந்த விலைகளில் திணைக்களம் கொள்வனவு செய்திருந்தமையும் அதற்கமைய கொள்வனவு நடைமுறையினுள் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்திற்கு வருகை தருகின்ற வெளிநாட்டு அதிதிகளிற்கு வழங்குவதற்காக ரூபா 187,700 பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாடுகள் இல்லையென்பதும் அனைத்துக் கொள்வனவுகளும் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**11.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

இலங்கை கடற்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 66 உத்தியோகத்தர்கள் மற்றும் 1044 கடற்படையினர் பதவியணியாக திணைக்களத்தில் சேவையாற்றியிருந்ததுடன் திணைக்களத்திற்கு தேவையான பதவியணியினரை திறைசேரியின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு 2015 யூன் 27 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.